# Deendayal Disabled Rehabilitation Scheme to promote Voluntary Action for Persons with Disabilities (Revised DDRS Scheme)

# ஊனமுற்றோர் நல நடவடிக்கைகளுக்கான தன்னார்வலர்களை ஊக்குவிக்கும் தீனதயாள் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம் (புதுப்பிக்கப்பட்ட திட்டம்)

ஊனமுற்ற நபர்களுக்கான மறுவாழ்வு தொடர்பான திட்டங்களைச் செயல்படுத்தும் அரசு சாரா அமைப்புகளுக்கு ஐந்தாண்டு திட்டங்களின் மூலம் **தொடர்ந்து** மத்திய அரசு மானிய உதவியை வழங்கிவருகிறது.

ஊனமுற்றோர் நலச்சட்டத்தின் 66 ஆவது பிரிவை வலுவுடன் அமல்படுத்துவதற்காக 1999 இல் ஊனமுற்றோர் மறுவாழ்வுக்காக இருக்கும் நான்கு திட்டங்களைச் சேர்த்து ஒரே திட்டமாக "ஊனமுற்றோர் நலனுக்கான தன்னார்வ நடவடிக்கையை ஊக்கப்படுத்தும் திட்டம்" என்ற பெயரில் மத்திய பிரிவு திட்டம் கொண்டுவரப்பட்டது. இந்தப் பொதுத்திட்டம் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து அப்போது பொறுப்பில் இருந்த அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு அமல்படுத்தப்பட்டது. இதுதான் தீனதயாள் ஊனமுற்றோர் மறுவாழ்வு திட்டமாக மறுபெயர் சூட்டப்பட்டது. இருப்பினும் 2003 இல் செலவியல் விதிமுறைகள் திருத்தப்படவில்லை.

தீனதயாள் ஊனமுற்றோர் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் ஊனமுற்ற நபர்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்க அரசு சாரா நிறுவனங்களுக்கு உதவி அளிக்கப்படுகிறது.
உதாரணத்திற்கு,

i. பள்ளிக்கல்விக்கு முந்தைய பருவத்தில் உள்ள குழந்தைகளுக்கு ஆரம்பத்திலேயே உதவும் திட்டங்கள்.
ii. சிறப்புக் கல்வி,
iii. தொழிற்பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு வழங்குதல்
iv. சமூக அடிப்படையிலான மறுவாழ்வு
v. மனிதவள மேம்பாடு
vi. மனநலக்குறைபாடு உள்ள நபர்களுக்கு உளவியல்- சமூக மேம்பாட்டுப் பயிற்சி
vii. தொழுநோயிலிருந்து குணமானவர்களுக்கு மறுவாழ்வு உதவிகள் போன்றவை.

மத்திய அரசின் **மற்றொரு** திட்டமான ஊனமுற்ற நபர்களுக்கான உதவிக்கருவிகள் வாங்குவதற்கான நிதி உதவித் திட்டம் ( ஏடிஐபி)- **ன் கீழ்** ஊனமுற்ற நபர்களுக்கு உதவிக்கருவிகள் **வழங்கப்படுகின்றன**.

**தன்னார்வ நிறுவனங்கள் அரசின் நிதி உதவியைக் கொண்டு செயல்படுத்தும் பல்வேறு சேவைகள் சார்ந்த மாதிரித் திட்டங்கள் தீனதயாள் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டத்தின் வழிகாட்டுதல்கள் படி செயல்படுத்தப்படுகின்றன.** மாதிரித் திட்டங்களில் கீழ்க்கண்ட விவரங்கள் தரப்பட்டுள்ளன:

i. நோக்கம், நிறைவேற்ற வேண்டிய தேவைகள், பயன்பெறும் குழுவினர்( என்னவகை ஊனம், வயது, பயன்பெறுபவர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை)

ii. ஆசிரியர்- பயன்பெறுபவர் விகிதம்(**புது முகப்பள்ளி** (ப்ரீ ஸ்கூல்) மற்றும் சிறப்புப் பள்ளிகள்)

iii. தொழிற்பயிற்சிக்கான வியாபாரங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பட்டியல்

iv. **குறிப்பிட்ட எண்ணிக்கையில் உள்ள பயனாளிகளுக்கு அளிக்கப்பட வேண்டிய தொடர்ந்து மற்றும் ஒரு முறை மட்டுமே வழங்கப்படும் நிதி உதவித்தொகை குறித்த செலவியல் விதிமுறைகள்.**

வரையறுக்கப்பட்ட திட்டநிதியில், 90 சதவிகிதம் வரை நல்கைத் தொகை (மானியத் தொகை) வழங்கப்படும். ஏற்கனவே இருக்கும் மாதிரித் திட்டத்தின் செலவியல் விதிமுறைகளின் அடிப்படையில் இத்திட்டத்திற்கு நிதி வழங்கப்படும்.2007-08ம் ஆண்டில் இருந்து அரசு சாரா நிறுவனங்களின் தன்னிறைவுத் தன்மையை ஊக்குவிக்கும் அடிப்படையில் ஏற்கனவே ஏழு ஆண்டுகளுக்கு நிதி வாங்கிய நகர்புற அமைப்புகளுக்கு 75 சதவிகித நிதி வழங்கப்படுகிறது.அது முதலாம் ஆண்டில் 90% என்றும்,ஓர் ஆண்டு விட்டு மறு ஆண்டில் 5% குறைத்தவாறு 75% நிதி உதவி அளவை அடையும்.

அனுமதிக்கப்பட்ட அனைத்து தொடராத செலவு வகைகளுக்கும் நிதி நல்கை ஓர் ஆண்டு மாதிரித் திட்டத்துக்கு வழங்கப்படுமெனில், தொடரும் செலவின வகைகளுக்கு 80 சதவிகிதமும் மீதி 20 சதவிகிதம் தொடரா செலவின வகைகளுக்கும் வழங்கப்படும்.

**<u>நோக்கங்கள் ( objectives)</u>**

இத்திட்டத்தின் நோக்கங்கள்:

3.1.1 ஊனமுற்ற நபர்களுக்கு சம வாய்ப்புகள், சமபங்கு, சமூக நீதி மற்றும் மேம்பாடு சாத்தியமாகும் சூழலை உருவாக்குதல்.

3.1.2 ஊனமுற்றோர் சமவாய்ப்புகள் மற்றும் உரிமை பாதுகாப்புச் சட்டம்,1995-ஐச் சரியாக அமலாவதற்காக தன்னார்வ நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

அணுகுமுறை மற்றும் செயல்திட்டம் (**<u>APPROACH AND STRATEGY)</u>**

இத்திட்டத்தின் அணுகுமுறை என்னவெனில் தன்னார்வ அமைப்புகளுக்கு நிதி வழங்கி ஊனமுற்ற நபர்களுக்குத் தேவையான அனைத்து மறுவாழ்வு சேவைகளையும் கிடைக்கச் செய்வதே. ஆரம்பகட்ட சிகிச்சை தலையீடு, அன்றாட வாழ்க்கைப் பயிற்சிகள் மேம்பாடு, கல்வி, வேலைவாய்ப்பு பெறுவதற்கான திறன் மேம்பாடு, பயிற்சி மற்றும் விழிப்புணர்வுக் கல்வி ஆகியவை இதில் அடங்கும். சமூகத்தின் மையநீரோட்டத்தில் ஊனமுற்ற நபர்களை இணைக்கவும், அவர்களது ஆற்றலை நிரூபிக்கவும், கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களில் கவனம் கொடுக்கப்பட வேண்டும். இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக முக்கிய செயல்திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

i. அனைத்து மட்டங்களிலும், அனைத்து வடிவங்களிலும் கல்வி வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அத்துடன் தொழில்ரீதியான வாய்ப்புகளை உருவாக்கி, வருவாய் பெருக்கத்திற்கும், லாபகரமான பணிகளிலும் ஊனமுற்ற நபர்கள் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

ii. முறைசார்ந்த மற்றும் முறைசாராத வேலைவாய்ப்புகளை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டும்.

iii. விரிவான மறுவாழ்வுத் திட்டங்கள் நகர்புறங்கள் மற்றும் கிராமப்புறங்களையும் சென்றடையும் வகையில் அமல்படுத்த வேண்டும்.

iv. ஊனமுற்ற நபர்களுக்கான செயல்பாடுகள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் பல்வேறு பணிகளுக்குத் தேவைப்படும் நபர்களுக்குப் பயிற்சி அளிக்கும் மனிதவள மேம்பாட்டுப் பணிகளை ஆதரிக்க வேண்டும்.

v. வளர்ச்சி, வெளியீடு, தகவல் பரப்புதல் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள்

வெளியீட்டை ஆதரித்தல் அவசியம்

vi. எல்லா வசதிகளும் கொண்ட வள மையங்களை உருவாக்குதல் அவசியம். சுய உதவிக்குழுக்கள், பெற்றோர் அமைப்புகளையும் , பிறர் துணையின்றி ஊனமுற்றோர் தனித்துவமாக வாழ்வதையும் ஊக்குவித்தல் வேண்டும்

vii. ஊனமுற்றோருக்குள் ஒருங்கிணைப்பு, ஒத்துழைப்பு மற்றும் தொடர்பு வலை உருவாக்குவதையும் பலதுறை தொடர்புகளை உருவாக்குவதையும் ஊக்குவித்தல் வேண்டும்.

viii. ஊனமுற்ற நபர்களுக்கு சௌகரியமான சூழல் இருக்கும் திட்டங்களிலும் பசுமைச்சூழல் பேணப்படும் திட்டங்களிலும் அவர்களை பணியாற்ற ஊக்குவித்தல் வேண்டும்.

ix. ஊனமுற்ற நபர்களுக்கு பயன்படும் வகையிலான கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பராமரிப்பு, இருக்கைகள் அமைப்பு, வசதிகள் ஏற்படுத்துதல், எந்திரங்கள் ஆகியவற்றை உருவாக்க ஊக்குவிக்க வேண்டும்.

x. விளையாட்டு, ஓய்வுநேர காரியங்கள், சுற்றுலாக்கள், படைப்பு மற்றும் நிகழ்கலைகள், கலாசார, சமூகரீதியான நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட போதிய உதவிகளைச் செய்யவேண்டும்.

xi. போதுமான வீட்டு வசதி, வீடுகள் மற்றும் விடுதி வசதிகளுக்கு உதவவும் அதற்கு வசதி செய்து தரவும் வேண்டும்

xii. கருத்தாய்வுகளை ஊக்குவித்து நோயின் தோற்றநிலை ஆய்வுகளுக்கும் உதவ வேண்டும்.

xiii. பல்வேறு மேம்பாட்டுப் பிரிவுகள், புதுமையான உத்திகள், உதவிக் கருவிகள், தொழில்நுட்பம் போன்றவற்றில் ஆராய்ச்சியை ஊக்குவித்து தரமான கருவிகள் உற்பத்தியையும் ஊக்குவிக்க வேண்டும்

xiv. ஊனமுற்ற நபர்களின் மனித, குடிமை மற்றும் நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பை உறுதிசெய்ய சகலவிதங்களிலும் ஊக்கம் அளிக்க வேண்டும்.

xv. சட்ட அறிவு, சட்ட ஆலோசனை, சட்ட உதவி மற்றும் அமலில் இருக்கும் சட்டங்களை ஆராய்ந்து மதிப்பிடும் அறிவுத்திறனை அவர்க ளுக்கு ஊட்டி ஊக்குவிக்க வேண்டும்.

xvi. ஊனமுற்ற நபர்களுக்கான பிற தேவைகளுக்கு உதவும் வகையிலும், ஊனமுற்றோர் சம வாய்ப்புகள் மற்றும் உரிமைப் பாதுகாப்பு சட்டம், 1995 இன் படி அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய உதவிகளை

உறுதிசெய்யும் வகையிலும் எடுக்கப்படும் முயற்சிகளை ஆதரிக்க வேண்டும்.

xvii. **The following model projects are supported under the scheme:-**

இத்திட்டத்தின் அடிப்படையில் கீழ்க்கண்ட மாதிரித் திட்டங்கள் உதவிபெறுபவை:-

I. புகுமுகப் பள்ளி (pre-school), **ஆரம்பகட்ட சிகிச்சைத் தலையீடு & பயிற்சி திட்டம்**

ஆறு வயது வரையுள்ள குழந்தைகளை சிறப்புப் பள்ளிகளுக்குச் செல்ல தயார்செய்தல். அல்லது பொதுப் பள்ளிகளில் அவர்களைச் சரியான பருவத்தில் சேர்ப்பதற்கான தயாரிப்புகளைச் செய்தல். இத்திட்டத்தின் கீழ் மருத்துவ சேவைகளும், பகல்நேரப் பராமரிப்பும், பெற்றோர்களுக்கு ஆலோசனைகளும் தரப்படும்.

II. **சிறப்புப் பள்ளிகள்**

மூளைக்குறைபாடுள்ள, பேச்சு மற்றும் செவித்திறன் குறைபாடுள்ள, பார்வையற்ற, பார்வைக்குறைபாடுள்ள குழந்தைகளுக்கான சிறப்புப் பள்ளித் திட்டங்களுக்கு உதவி வழங்கப்படும். புலனுணரும் திறன்கள் மற்றும் தொடர்புத் திறன்களை மேம்படுத்துவதற்கு இந்த சிறப்புக் கல்வியில் பிரதான முக்கியத்துவம் அளிக்கப்படும். இதன் நோக்கம் என்னவெனில் அன்றாட வாழ்க்கைத் திறன்களைப் பயின்று பொதுவான பள்ளிகளிலும், சமூகத்திலும் அதை அக்குழந்தைகள் நடைமுறைப்படுத்துவதுதான். ஊனமுற்ற நபர்கள் தங்கும் வசதிகளும் இந்த நிதியின் கீழ் கவனிக்கப்படும். இந்த நிதியில் தங்கும் வசதிகளும் அடங்கும். எலும்புரீதியாக ஊனமுற்ற குழந்தைகளுக்கு சிறப்புப் பள்ளிகளைத் தொடரும் திட்டங்களுக்கும் நிதி உதவி அளிக்கப்படும். ஆனால் மாதிரித் திட்டம் இல்லை.

III. **மூளை இசிவு நோய் தாக்கிய குழந்தைகளுக்கான திட்டம்(Project for Cerebral Palsied Children)**

மேற்சொன்னதுபோல சிறப்புப் பள்ளிகளை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கம். ஆனால் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் தனிப்பட்ட முறையில் மருத்துவ சிகிச்சைஅளிப்பதே தலையாய நோக்கம் ஆகும்.

IV. **தொழிற்பயிற்சி மையங்கள்(Vocational Training Centres)**

15 முதல் 35 வயது வரையிலான ஊனமுற்ற நபர்களுக்கான திட்டம் இது.

அவர்களுக்கு வேண்டிய தொழில் திறன்களைக் கற்றுக்கொடுத்து, அவர்கள் பொருளாதாரரீதியான சுதந்திரத்தைப் பெறுவதற்கான பயிற்சிகள் அளிக்கப்படும். என்னென்ன தொழிற்பயிற்சிகள் என்பதும், பயிற்சி காலமும் இத்திட்டத்தில் வெளிப்படையாக தெரியப்படுத்தப்படும்.

V. **உறைவிட தொழிற்பட்டறைகள்( Sheltered Workshops)**

தொழிற்பயிற்சி மையங்களின் நோக்கம் இத்திட்டத்திற்கும் பொருந்தும். இவை ஊனமுற்ற நபர்களின் வருவாய் பெருக்கும் வாய்ப்புகளை உருவாக்கும்.

VI. **தொழுநோயிலிருந்து குணமானவர்களுக்கான திட்டம்(Project for Rehabilitation of Leprosy Cured Persons)**

தொழுநோயிலிருந்து குணமடைந்த நபர்களுக்கான சமூப் பொருளாதார நிலையை அதிகரிக்கும் தொழில்திறன் பயிற்சித் திட்டம் இது. இத்திட்டத்தில் தொழிற்பயிற்சி மையங்களில் பயிற்சி தருதல் மற்றும் இல்லத்தில் பயிற்சி (தீவிர குறைபாடுள்ளவர்களுக்கு மட்டும்) தருதல் அடங்கும்.

VII. **மூளைக்குறைபாடு உள்ள நபர்களுக்கான உளவியல்- சமூக மேம்பாட்டு இல்லங்கள்( Half Way Home for Psycho-Social Rehabilitation of Treated and Controlled Mentally Ill Persons)**

மூளைக்குறைபாடுள்ள நபர்களுக்கு மனநல மருத்துவமனைகள்/அடைக்கல இல்லங்களில் சிகிச்சை அளித்து அவர்களின் நிலை கட்டுப்பாட்டுக்கு வந்தபிறகு மறுவாழ்வு அளிக்கும் திட்டம் இது. இத்திட்டத்தின் மூலம் மனநல சிகிச்சை பெற்றவர்களுக்குத் தொழிற்பயிற்சியும், அவர்கள் குடும்பத்தினருக்கும் நெருங்கிய சமூகத்தினருக்கும் ஆலோசனைகளும் வழங்கி இச்சமுதாயத்தினுடன் இணைக்க வழிவகை செய்யப்படும். மருத்துவ ஆலோசனை/சிகிச்சை வழங்குவதோடு, உளவியல்ரீதியாக அவர்களுக்கு ஏற்படும் தொந்தரவுகளும் பரிவுடன் கவனிக்கப்படலாம்..

VIII. **கருத்தாய்வு, அடையாளம் காண்தல், விழிப்புணர்வு தொடர்பான திட்டம் (Project relating to Survey, Identification, Awareness and Sensitization)**

ஊனமுற்ற நபர்களின் பெற்றோர்கள்/பாதுகாவலர்கள் ஆரம்பகட்டத்திலேயே பிரச்னைகளை அடையாளம் காணச் செய்தல், பொருத்தமான மறுவாழ்வு முறைகளை பரிந்துரைக்கச் செய்தல், பல்வேறு ஊனங்கள் தொடர்பான ஆய்வுளை ஊக்குவித்தல் உள்ளிட்டவை அடங்கும்.

IX. **இல்லத்திலேயே மறுவாழ்வு முறைகள் மற்றும் இல்லத்திலேயே ஊனமுற்றோர் நிர்வாகம் (Home Based Rehabilitation Programme/Home Management Programme)**

ஊனமுற்ற நபர்கள் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு நகர்வதற்கான உதவிகள் மற்றும் வழிகாட்டுதல்களைச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அத்துடன் அன்றாட தகவல் தொடர்பை வளர்த்தல் மற்றும் அன்றாட வாழ்க்கைத் திறன்கள், பயிற்சி அளித்தல், ஊனமுற்ற குழந்தைகளின் பெற்றோர் மற்றும் குடும்பத்தினருக்கு பயிற்சி மற்றும் விழிப்புணர்வு உள்ளிட்டவை அடங்கும்.

X. **சமூகரீதியிலான மறுவாழ்வுத் திட்டம்(Project for Community Based Rehabilitation)**

ஊனமுற்ற நபர்களுக்கு மறுவாழ்வு அளித்தும், தொழிற்பயிற்சிகள் கொடுத்தும் அவர்களின் சமூகத்தில் இணைந்திருக்க வைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஊனமுற்றோருக்கான சேவைகள் அரிதாக உள்ள/ இல்லாத இடங்களில் நிரந்தரமான ஒரு நிறுவன அமைப்பை ஏற்படுத்தாமல் ஊனமுற்ற நபர்கள், குடும்பத்தினர், சமூகம் மற்றும் மருத்துவ சேவை புரிபவர்கள் ஆகியோரிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி தேவைப்படும் சேவைகளை அளிக்கும் திட்டமாக இருக்கும். இத்திட்டம் கிராமப்புறங்களுக்கு மிகவும் ஏற்றது.

XI. **பார்வைக் குறைபாடுள்ளோர் மையங்கள் திட்டம் (Project for Low Vision Centres)**

பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு வழங்குவதற்கான மையங்களை ஊக்குவிக்கும் திட்டம். பார்வைக் குறைபாடு கொண்டவர்களை அடையாளம் காண்தல், மதிப்பிடுதல், மறுவாழ்வு மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுவதோடு பார்வைக் குறைபாடு கொண்டவர்கள் தங்களது பார்வைத்திறனை மேம்படுத்தவும், தங்களது ஆற்றலை அதிகபட்சம் வெளிப்படுத்துவதற்கான மருத்துவ, ஆலோசனை உதவிகளும் இம்மையத்தில் அளிக்கப்படும். .

XII. **மனித வள மேம்பாடுக்கான திட்டங்கள்(Projects for Human Resource Development)**

ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையில் ஊனமுற்றோர் சிறப்புக்கல்விக்கான பயிற்சியாளர்களுக்குப் பயிற்றுவிக்கும் திட்டங்கள், வளமையங்கள் மற்றும் அவற்றிடையே தொடர்பு வலைப்பின்னலை உருவாக்குதல் சார்ந்த திட்டங்கள் ஊக்குவிக்கப்படும்.

XIII. **கருத்தரங்குகள் / பயிலரங்குகள் / கிராமப்புற முகாம்கள்**

ஊனமுற்றோர் நலனுக்காக குறிப்பிட்ட நோக்கங்கள், பலன்கள் மற்றும் விளைவுகளை முன்னிறுத்தி நடத்தப்படும் கருத்தரங்குகள்/ **பயிலரங்குகள்** /கிராம முகாம்களுக்கு நல்ல நிதியுதவி அளிக்கப்படும்.

XIV. **ஊனமுற்ற நபர்களுக்கான சூழல்நலம் பேணும் திட்டங்கள்(Environment Friendly and Eco-Promotive Projects for the Handicapped)**

பசுமைநலம் பேணும் திட்டங்களான தோட்டக்கலை, மரக்கன்று நடுதல், நாற்றுப்பண்ணை ( நர்சரி) வைத்தல் போன்றவை ஊக்குவிக்கப்படும்

XV. **கணிப்பொறிக்கான நிதி உதவி(Grant for Computer)**

தேவைப்படும் மென்பொருள், வன்பொருள் வசதிகளுடன் கூடிய கணிப்பொறிகள் வாங்குவதற்கு இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் மற்ற திட்டங்களுக்கான கணிப்பொறிகளையும் வாங்கும் நடைமுறை இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது.

XVI. **கட்டடம் கட்டுதல் (construction of Building)**

வகுப்பறைகள், தொழிற்பயிற்சி அல்லது வேலைவாய்ப்பு மையங்கள், விடுதிக் கட்டடங்கள் கட்டவும் இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிக்கப்படும்.

XVII. **சட்ட அறிவு,, சட்ட ஆலோசனை, சட்ட உதவி, நடைமுறையில் இருக்கும் சட்டங்களை ஆய்வு செய்து மதிப்பிடுதலுக்கான பயிற்சித் திட்டம்(Project for Legal Literacy, including Legal Counseling, Legal aid and Analysis and Evaluation of Existing Laws.)**

துணை சட்டப் பயிற்சியாளர்கள் மற்றும் பிற ஊழியர்களுக்கு கௌரவத்தொகை மற்றும் நீதிமன்ற செலவுகளுக்காகும் தொகையையும் தரும் திட்டம் இது.

XVIII. **மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு மையங்கள்(District Disability Rehabilitation Centres)**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு மையங்கள் அரசால் உருவாக்கப்பட்டு தன்னார்வ நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படுவதே இதன் நோக்கமாகும். சமூகத்தின் அடித்தட்டு வரையில் விழிப்புணர்வு, மறுவாழ்வு மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும்

**பலதரப்பட்ட மாதிரித் திட்டங்களின் கீழ் கீழ்க்கண்ட விஷயங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படும்: :**

**I. தொடரும் செலவுகள்**

i. தன்னார்வ நிறுவனத்தால் திட்டத்திற்கு நியமிக்கப்படும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் கௌரவத் தொகை

ii. பயனாளிகளின் போக்குவரத்து வசதி

iii. பயனாளிகளுக்கான உதவித்தொகை மற்றும் விடுதிப் பராமரிப்பு

iv. மூலப்பொருட்களுக்கு ஆகும் செலவு

v. அலுவலகச் செலவுகள், மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணம் ஆகியவை

vi. வாடகை

**II. தொடராத செலவுகள்**

**i.** அறைக்கலன்கள், இருக்கைகள்

ii. கருவிகள்

iii. கட்டடம்

iv. புத்தகங்கள்

தொடரும் செலவுகள் மற்றும் தொடராத செலவுகளின் வரம்புகள் பற்றி திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**<u>தகுதியான அமைப்புகள்( ELIGIBLE ORGANISATIONS)</u>**

கீழ்க்கண்ட அமைப்புகள் இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி பெறுவதற்குத் தகுதியானவை:

i. சங்கப் பதிவுச் சட்டம், 1860 (XXI of 1860), அல்லது அதற்கு இணையான சட்டங்களின்கீழ் (மாநில அரசு அல்லது யூனியன் அரசால் அமல்படுத்தப்பட்டது) பதிவு செய்யப்பட்ட அமைப்புகள்

ii. பொது அறக்கட்டளையாக குறிப்பிட்ட அமலிலிருக்கும் சட்ட விதிக்கு உட்பட்டு பதிவு செய்த பொது அறக்கட்டளைகள்காலத்திற்கு பதிவுபெற்றிருக்க வேண்டும் அல்லது

iii. சட்டப்பிரிவு 25, கம்பெனி சட்டம், 1958 இன் கீழ் **பதிவுபெற்றிருக்கும் தொண்டு நிறுவனங்கள்**

அத்துடன் அந்தப் பதிவு நடந்து இரண்டு ஆண்டுகளாவது அமலில் இருத்தல் வேண்டும். அப்போதுதான் இத்திட்டத்தின் கீழ் நிதி உதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

**குறிப்பு:** விதிவிலக்காக, சமூக நீதி மற்றும் மேம்பாட்டு அமைச்சகத்தின் செயலர் இந்த குறைந்தபட்ச காலவரம்பை எழுத்துப்பூர்வமான பதிவுடன்,

அதற்கான நியாயங்களுடன் குறைக்க இடம் உண்டு.

3.4.1 (i) இலிருந்து (iii) ல் குறிப்பிடப்பட்ட அமைப்புகள் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:

i. நிர்வாக அமைப்பு ஒன்று சரியான முறையில் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். நிர்வாக அமைப்பின் பணிகள், அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் அனைத்தும் வரையறுக்கப்பட்டு எழுத்துரீதியாக ஆவணம் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

ii. திட்டத்தை எடுத்து நடத்துவதற்கான வளங்கள், வசதிகள் மற்றும் அனுபவத்தை அந்த அமைப்பு கொண்டிருக்க வேண்டும்

iii. அந்த அமைப்பு ஒரு தனிநபர் அல்லது ஒரு குழுவின் லாபத்துக்காக இயங்கக் கூடாது.

iv. பாலினம், மதம், சாதி அல்லது இன அடிப்படையில் யாருக்கும் அந்த அமைப்பு பாகுபாடு காட்டக்கூடாது.

v. சாதாரணமாக அந்த அமைப்பு இரண்டு ஆண்டுகளாவது செயல்பட்டிருக்க வேண்டும்.

vi. நிதி நிலை சிறப்பாக இருத்தல் வேண்டும்.

**Note:** பணி அனுபவம், குறிப்பிட்ட அமைப்பின் செயல்பாட்டு காலம், நிதி நிலை ஆகியவை தொடர்பான நிபந்தனைகளைச் செயலர், நிதி ஆலோசகரின் ஆலோசனை பெற்று அரிதான, விதிவிலக்கான சூழ்நிலைகளில் எழுத்துப்பூர்வமாக பதிவுசெய்து நெகிழ்த்தலாம்.

## நிதி உதவி பெறுவதற்கான வழிமுறைகள்(NORMS OF FINANCIAL ASSISTANCE)

**கொடுக்கப்படும் திட்டநிரலின் பயன்கள், சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் நிதியும் அதன் அளவும் தீர்மானிக்கப்படும். திட்டத்திற்காக வரைவுசெய்யப்பட்ட தொகையில் 90 சதவிகிதம் வரை தரப்படலாம். இது நிதி வரைமுறைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். அரசு சாரா நிறுவனங்களின் தன்னிறைவுத் தன்மையை ஊக்குவிக்கும் அடிப்படையில் ஏற்கனவே ஏழு ஆண்டுகளுக்கு நிதி வாங்கிய நகர்புற அமைப்புகளுக்கு 75 சதவிகித நிதியை வழங்கலாம்.அது முதலாம் ஆண்டில் 90% என்றும்,ஓர் ஆண்டு விட்டு மறு ஆண்டில் 5% குறைத்தவாறு 75% நிதி உதவி அளவை அடையும்.**

செலவு வரைமுறைகள் **குறித்த விவரங்கள் பிற்சேர்க்கை** **<u>XIV to XVI in பாகம் ஏ-</u>** **3.5.3** இல் தரப்பட்டுள்ளது. ஒரு அமைப்பு ஏற்கனவே நிதி உதவியைப் பெற்றிருந்தாலோ, இத்திட்டத்தின் கீழ் வேறொரு இடத்திலிருந்து நிதியை எதிர்நோக்கியிருந்தாலோ, அந்த அம்சத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டே நிதி உதவி வழங்கப்படும். அந்த விவரங்களை விண்ணப்பத்தில் கொடுக்க வேண்டும்.

## <u>விண்ணப்பித்தலும் ஒப்புதல் பெறுதலும் (APPLICATION AND SANCTION)</u>

**For new projects**

### புதிய திட்டங்களைத் தொடங்க

மாநில அரசு/மாநில ஆணையர்கள்/தேசிய அமைப்புகள்/நிறுவனங்கள்/சமூக நீதி மற்றும் மேம்பாட்டு அமைச்சகத்தால் நியமிக்கப்பட்ட அமைப்பு ஆகியவற்றின் பரிந்துரைகள் புதிய திட்டங்களுக்கான நிதியைப் பெறுவதற்கு அவசியமானது. வல்லுனர்களைக் கொண்டு பயிற்சி அளித்தல் தொடர்பான புதிய திட்டங்களைப் பொருத்தவரை ஒப்புதலும் உதவியும் பெற இந்திய மறுவாழ்வு கவுன்சிலுக்கு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

**For continuing projects**

### திட்டங்களைத் தொடர்வதற்காக

I. நிதி உதவி (மானியத் தொகை) பெற குறிப்பிடப்பட்ட வடிவில் விண்ணப்பத்தைத் தாக்கல் செய்யவேண்டும்.

நிதி உதவி (மானியத் தொகை) பெற கீழ்க்கண்ட ஆவணங்களைக் காண்பிக்க வேண்டும்:

i. நிதி ஆண்டில் தேவைப்படும் நிதிக்கான வரவு செலவு மதிப்பீட்டை காண்பிக்க வேண்டும் (**தொடர்ந்து மற்றும் ஒரு முறை மட்டுமே** செலவிடப்படும் வகைகள் குறித்த பட்டியலையும் காண்பித்தல் வேண்டும்).

ii. தணிக்கை செய்யப்பட்ட/செய்யப்படாத முந்தைய ஆண்டின் கணக்குவழக்குகளைக் குறிப்பிட வேண்டும். அனுமதி வழங்கப்பட்ட ஒவ்வொரு வகையிலும் (items) ஆன செலவையும் குறிப்பிட்டு அதற்கு வழங்கப்பட்ட நிதியையும் சேர்த்துக் குறிப்பிட வேண்டும்.

iii. வரவு மற்றும் செலவு அறிக்கை, வருவாய் மற்றும் செலவு அறிக்கை மற்றும் பண இருப்புநிலைக் குறிப்பையும் காண்பிக்க வேண்டும்.

iv. முந்தைய ஆண்டறிக்கை.

v. அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு வகையிலும் ஆன செலவு விபரம் குறிப்பிடப்பட்டு தணிக்கை செய்யப்பட்ட பயன்பாட்டுச் சான்றிதழ்

vi. ஊழியர்கள் பற்றிய விவரம்

vii. பயனாளிகள் பற்றிய விவரம்

viii. அலுவலகத்தை நடத்துபவர்கள் மற்றும் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் பற்றிய விவரங்கள்

ix. நிறுவனம் முக்கியமாக நினைக்கும் வேறு ஏதாவது விவரம் இருந்தாலோ, கோரப்பட்டாலோ அதையும் தரவேண்டும்.